

புதுக்கோட்டை முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் கருணாநிதி மாவட்ட விளையாட்டரங்கில், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் (புதுக்கோட்டை பிரிவு) சார்பில், முதலமைச்சர் இளைஞர் விளையாட்டு திருவிழா ”இது நம்ம ஆட்டம் 2026 போட்டிகளை, இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா தலைமையில் நேற்று முன்தினம் (25.01.2026) கொடியசைத்து துவக்கி வைத்து, வெற்றிபெற்ற விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு பரிசுத்தொகை மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கினார். உடன், புதுக்கோட்டை மாநகராட்சி மேயர் திருமதி.திலகவதி செந்தில், புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மரு.வை. முத்துராஜா, மாநகராட்சி துணை மேயர் எம்.லியாகத் அலி, மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர் து.செந்தில்குமார் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.



கரூர் மாவட்ட மாணவர் அணி சார்பில், தாய்மொழி காக்க இன்னுயிர் ஈந்த மொழிப்போர்த் தியாகிகளுக்கு வீரவணக்க நாள் பொதுக்கூட்டம், கரூர், செங்குந்தபுரம் 80 அடி சாலையில், நடைபெற்றது. கழக அமைப்புச் செயலாளர், முன்னாள் எம்.பி. ஆர்.எஸ்.பாரதி, கரூர் மாவட்டச் செயலாளர் வி. செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. சிறப்புரையாற்றினர். தலைமைக் கழக பேச்சாளர்கள் டான் அசோக், தி.பிரபு, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட கழக நிர்வாகிகள், மாநகர, பகுதி, ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள் மற்றும் பொறுப்பாளர்கள், அனைத்து சார்பு அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், வார்டு, கிளை கழக நிர்வாகிகள் மற்றும் பூத் ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

### கடலூர் கிழக்கு மாவட்டத்திற்கு

# கழகத் தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழுவினர் வருகை!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிக்கை!



தி.மு.க. தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழு அனைத்து தரப்பினரிடமும் பரிந்துரைகளை கேட்க, வருகின்ற 01.02.2026 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் கடலூர் மாவட்டம், வடலூர் மங்கையர்கரசி திருமண மண்டபத்திற்கு வருகைபுரிகின்றனர், சம்மந்தப்பட்ட மாவட்டத்தினர் பெருந்திரளாக கலந்து கொள்ளுமாறு வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர், கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க செயலாளர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு முலமைச்சர் கழக தலைவர் அவர்களின் வழிகாட்டுதலின்படி சட்டப்பேரவைத் தேர்தல் 2026 தி.மு.க. தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழுவினர் வருகின்ற 01.02.2026 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் கடலூர் மாவட்டம், வடலூர் மங்கையர்கரசி திருமண மண்டபத்தில், கடலூர் கிழக்கு, கடலூர் மேற்கு, விழுப்புரம் வடக்கு, விழுப்புரம் மத்திய, விழுப்புரம் தெற்கு, கள்ளக்குறிச்சி வடக்கு, கள்ளக்குறிச்சி தெற்கு ஆகிய மாவட்டங்களில் உள்ளவர்களிடம், கழக துணைப் பொதுச்செயலாளர், மக்களவைக் குழு தலைவர் கனிமொழி கருணாநிதி தலைமையில், கழக செய்தி தொடர்புக்குழு தலைவர், முன்னாள் எம்.பி. டி.கே.எஸ்.இளங்கோவன், உயர்கல்வித் துறை அமைச்சர், முனைவர் கோவி.செழியன், தவகல் தொழிநுட்பம் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன், தொழில்துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா, கழக அயலக அணி செயலாளர் எம்.எம்.அப்துல்லா மு.எம்.பி, கழக செய்தி தொடர்பு குழு செயலாளர் பேராசிரியர் கான்ஸ்டன்டைன் ரவீந்திரன், கழக மருத்துவர் அணி செயலாளர் மருத்துவர் எழிலன் நாகநாதன் எம்.எல்.ஏ, கழக சுற்றுச்சூழல் அணி செயலாளர் கார்த்திகேய சிவசேனாபதி, கழக மகளிர்தொண்டர் அணி இணை செயலாளர் ஆ.தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ, ஜி.சந்தானம் ஐ.ஏ.எஸ், சுரேஷ் சம்பந்தம் ஆகியார் அடங்கிய குழுவினர்கள் வருகை தந்து பொதுமக்கள், கழக நிர்வாகிகள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரை சந்தித்து தேர்தல் அறிக்கைகான பரிந்துரைகளை கேட்க இருக்கின்றனர்.

ஆகவே சம்மந்தபட்ட கடலூர் கிழக்கு, கடலூர் மேற்கு, விழுப்புரம் வடக்கு, விழுப்புரம் மத்திய, விழுப்புரம் தெற்கு, கள்ளக்குறிச்சி வடக்கு, கள்ளக்குறிச்சி தெற்கு கழக மாவட்டங்களில் இருந்து அமைச்சர் பெருமக்கள், மாவட்ட கழக செயலாளர்கள், முன்னாள், இந்நாள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், கழக அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள், முன்னாள், இந்நாள் உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் நகர்புற உள்ளாட்சி பிரதிநிதிகள், அனைவரும் பெருந்திரளாக கலந்துகொள்ள வேண்டும். மேலும் மேற்கண்ட தங்கள் மாவட்டத்தை சார்ந்த வணிகர் சங்கள், விவசாயிகளின் பிரதிநிதிகள், நெசவாளர்கள், மீனவ சங்கள், தொழிற்சங்கள், தொழில் முனைவோர், மாணவர் சங்கங்கள், கல்வியாளர்கள், அரசு ஊழியர்களின் பிரதிநிதிகள், தொண்டு நிறுவனங்கள், தன்னார்வலர்கள், மற்றும் பொதுமக்கள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரையும் அழைத்து வந்து திமுக தேர்தல் அறிக்கைத் தயாரிப்புக்குழுவினரைச் சந்திப்பதற்கான ஏற்பாடுகளை ஒருங்கிணைக்க வேண்டுமென கோட்டுக்கொள்கிறேன்.

**அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம்**
*செயலாளர்,*
*கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க.*

### 100 ஆண்டுகள் பழமையான கட்டிடங்களை சீரமைத்துக் கொண்டிருக்கிறோம்

# திருவண்ணாமலையில் 3 ஆய்வு மாளிகைகள் கட்டப்பட்டுள்ளன!

## சட்டப்பேரவையில் – கு.பிச்சாண்டி கேள்விக்கு – அமைச்சர் எ.வ.வேலு பதில்!

**சென்னை, ஜன. 27–**

**சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின் போது பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி கேட்ட கேள்வியும் அக்கேள்விக்கு பொதுப் பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு அளித்த பதிலும் வருமாறு:–**



**கு. பிச்சாண்டி:** *என்னுடைய கீழ்ப்பெண்ணாத்தூர் சட்டமன்றத் தொகுதியில், நாயுடுமங்கலம் என்ற பகுதியிலே வெள்ளைக்காரர் காலத்தில் ஒரு ஏக்கருக்கு மேல் அங்கே ஒரு ஆய்வு மாளிகை கட்டப்பட்டிருக்கிறது. ஆனால், அது பழுதடைந்திருக்கிறது. அது இப்போது தேசிய நெடுஞ்சாலையாக, மங்களூர் கடலூருக்கு தேசிய நெடுஞ்சாலையாக மாறியிருக்கிறது. ஆகவே, முக்கியமான அந்த இடத்திலே மீண்டும் ஒரு ஆய்வு மாளிகை கட்டித் தரப்படுமா? அதேபோன்று நெடுங்குளம் என்ற கிராமத்திலே வெள்ளைக்காரர்கள் காலத்திலே கட்டப்பட்ட ஒரு ஆய்வு மாளிகை இருக்கிறது. அப்படிப்பட்ட புராதான மான ஆய்வு மாளிகைகள் நிறைய இருக்கின்றன. அவைகளைக் கண்டறிந்து அவைகளில் ஆய்வு மாளிகை கட்டித் தருவதற்கு அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.*

**அமைச்சர் எ.வ. வேலு:** *நாயுடுமங்கலத்திலே இருக்கிற அந்த ஆய்வு மாளிகை என்பது நானும் அறிவேன். பொதுவாக திருவண்ணாமலை மாவட்டத்தைப் பொறுத்தளவிற்கு இந்த ஆட்சிப் பொறுப்பேற்றவுடனேயே ஜவ்வாது மலை என்கிற பகுதியிலே ஆய்வு மாளிகையே இல்லை, Circuit Houseயே இல்லை என்ற அடிப்படையில், முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்தவுடனே அதைக் கட்டுவதற்கு அனுமதியளித்தார்கள். பணம் ஒதுக்கினார்கள். இப்போது அந்த மலையில் ஆய்வு மாளிகை கட்டப்பட்டு, துணை முதலமைச்சர் அவர்களின் திருக்கரங்களால் அதை நாங்கள் திறந்து வைத்தோம். ஒன்று. இன்னொன்று, சட்டமன்ற உறுப்பினர் ஜோதி அவர்கள் ஒரு கோரிக்கை வைத்தார்கள். ஏற்கெனவே, இருக்கிற அந்த ஆய்வு மாளிகை தலையில் விழுகின்ற நிலையில் இருக்கிறது என்பதை அவர் கோரிக்கையாகச் சொன்னார். அதை முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்றோம். அங்கும் ஒன்று புதிதாகக் கட்டிக் கொடுத்தார்.*

*திருவண்ணாமலை என்பது மாவட்டத்தின் தலைநகர். அங்கு ஆய்வு மாளிகையே இல்லாத ஒரு சூழ்நிலை நீண்ட நாட்களாக இருந்தது. மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு முன்னால் ஆய்வு மாளிகை ஒன்றைக் கட்டித் தர வேண்டுமென்று என் சார்பாகவும், சட்டமன்ற உறுப்பினரின் சார்பாகவும் கேட்டேன். முதலமைச்சர் அவர்கள் அனுமதித்திருக்கிறார்கள். திராவிட மாடல் ஆட்சியில் அந்த மாவட்டத்தில் 3 ஆய்வு மாளிகைகள் கட்டப்பட்டுள்ளன. அதனால், கு.பிச்சாண்டி அவர்களுக்கு நான் சொல்ல விரும்புவது என்னவென்றால், அதுகுறித்து நானும் அறிவேன்; 100 ஆண்டு காலம் பழமையான கட்டடங்களையெல்லாம் Iconic என்ற அடிப்படையில் நாம் அவற்றைக் கட்டிக் கொண்டுதான் இருக்கிறோம்; சீரமைத்துக்கொண்டிருக்கிறோம். 2026-2027 நிதியாண்டில் கட்டாயமாக நாயுடுமங்கலத்தில் சுற்றுலா மாளிகை கட்டித் தரப்படும்.*

*இவ்வாறு விவாதம் நடைபெற்றது.*

### பெரியார், அண்ணா, கலைஞர் வழியில் முதல்வர் மு.க.ஸ்டாலின்! ஒன்றியத்திலிருந்து

# எத்தனை தாக்குதல்கள் வந்தாலும் அதை தடுத்திடும் எஃகு கோட்டைதான் ‘திராவிட மாடல்’ ஆட்சி!

## ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் பாராட்டு!

சென்னை, ஜன. 27 –

பெரியார், அண்ணா, கலைஞர் வழியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களும் மொழியைப் பாதுகாக்க தொடர்ந்து போராடி வருகிறார். ஒன்றியத்திலிருந்து எத்தனை தாக்குதல்கள் வந்தாலும் அதை தடுத்திடும் எஃகு கோட்டைதான் ‘திராவிட மாடல்’ ஆட்சி என ‘ தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் பாராட்டுத் தெரிவித்துள்ளது.



தினகரன்

ஜனவரி 26, 2026 திங்கட்கிழமை

மொழிக்கு முக்கியத்துவம்

தமிழ்நாட்டில் இந்தி திணிக்கப்படும்போதெல்லாம், அதற்கு எதிரான போராட்டங்கள் வெவ்வேறு காலக்கட்டங்களில் வெகுண்டெழுந்துள்ளன. தமிழ்நாட்டில் 1938ம் ஆண்டு மற்றும் 1965ம் ஆண்டுகளில் இந்தி திணிப்பு தீவிரமாக மேற்கொள்ளப்பட்டது. இதற்காக மாணவர்கள் நடத்திய போராட்டங்கள் ஒன்றிய ஆட்சியாளர்களையே அதிர வைத்தன. அதிலும் 1938ம் ஆண்டில் ராஜாஜி தலைமையிலான காங்கிரஸ் அரசு பள்ளிகளில் இந்தியை கட்டாயமாக்கியபோது, பெரிய அளவிலான போராட்டங்கள் வெடித்தன.

போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்களும், தனித்தமிழ் இயக்கத்தினரும் பல்வேறு ஒடுக்குமுறைகளுக்கு உள்ளாயினர். தந்தை பெரியார் சிறையில் அடைக்கப்பட்டார். இந்த போராட்டத்தில் நடராசன், தாளமுத்து ஆகிய இருவரும் சிறையிலே …

தமிழ்நாட்டில் இந்தி திணிக்கப்படும்போதெல்லாம், அதற்கு எதிரான போராட்டங்கள் வெவ்வேறு காலக்கட்டங்களில் வெகுண்டெழுந்துள்ளன. தமிழ்நாட்டில் 1938ம் ஆண்டு மற்றும் 1965ம் ஆண்டுகளில் இந்தி திணிப்பு தீவிரமாக மேற்கொள்ளப்பட்டது. இதற்காக மாணவர்கள் நடத்திய போராட்டங்கள் ஒன்றிய ஆட்சியாளர்களையே அதிர வைத்தன. அதிலும் 1938ம் ஆண்டில் ராஜாஜி தலைமையிலான காங்கிரஸ் அரசு பள்ளிகளில் இந்தியை கட்டாயமாக்கிய போது, பெரிய அளவிலான போராட்டங்கள் வெடித்தன.

போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்களும், தனித்தமிழ் இயக்கத்தினரும் பல்வேறு ஒடுக்குமுறைகளுக்கு உள்ளாயினர். தந்தை பெரியார் சிறையில் அடைக்கப்பட்டார். இந்த போராட்டத்தில் நடராசன், தாளமுத்து ஆகிய இருவரும் சிறையிலே உயிரிழந்தனர். மீண்டும் 1963ம் ஆண்டில் இந்தி திணிப்பு க்கு சட்டம் நிறைவேற்ற ப்பட்ட நிலையில், திருச்சி கீழப்பழுவூர் சின்னச்சாமி தீக்குளித்து இறந்தார். 1965ம் ஆண்டு மும்மொழி கொள்கை அறிமுகம் செய்யப்பட்ட நாளில் இருந்தே தமிழ்நாட்டில் பதற்றம் அதிகரித்தது.

ஜனவரி 25ம் தேதியை துக்க நாளாக அனுசரித்த முன்னாள் முதல்வர் அண்ணா உள்ளிட்ட ஆயிரக்கணக்கானோர் தடுப்பு காவலில் சிறையில் அடைக்கப்பட்டனர். மறுநாள் குடியரசு தினத்தன்று சென்னை கோடம்பாக்கத்தைச் சேர்ந்த சிவலிங்கம் என்பவர் தீக்குளித்தார். 27ம் தேதி முத்து, சாரங்கபாணி, வீரப்பன் ஆகியோர் தீக்குளித்து இறந்தனர். இந்தி எதிர்ப்புக்காக சிலர் விஷம் குடித்தனர்.

அதே ஆண்டின் பிப்ரவரி மாதத்திலும் இந்தி எதிர்ப்பு போராட்டங்கள் தொடர்ந்த நிலையில், அப்போதைய பிரதமர் லால்பகதூர் சாஸ்திரி, நேருவின் வாக்குறுதிகள் நிறைவேற்றப்படும் என கூறி போராட்டங்களுக்கு முற்றுப்புள்ளி வைத்தார்.

ஒன்றியத்தில் கடந்த 12 ஆண்டுகளாக தொடர்ச்சியாக ஆட்சி செய்யும் பா.ஜ. அரசும், இந்தியை ஏதாவது ஒரு வகையில் திணிக்க தொடர்ந்து முயன்று வருகிறது. தமிழகத்திற்கான கல்வி நிதியை முறையாக தர மறுப்பதோடு, இந்தியாவின் ஒரே மொழியாக இந்தியை மாற்றிட துடிக்கிறது. இப்போதும் கூட தமிழ்நாடு தன் நிலையில் மாறாது, தொடர்ந்து மொழிப்பற்றோடு திகழ்வதற்கு ‘திராவிட மாடல்’ ஆட்சியே காரணம் எனலாம்.

மொழிப்போரின் வெற்றி வெளிச்சத்திற்கு ஒளிவிளக்குகளாய் திகழ்ந்து உயிர் துறந்த நடராசன் தாளமுத்து ஆகியோரது தியாகத்தைப் போற்றும் வகையில் தி.மு.க. ஆட்சி தொடர்ந்து நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. சென்னை எழும்பூரில் அவர்கள் பெயரில் மாளிகை கட்டப்பட்டுள்ள நிலையில், அங்கு தாளமுத்து – நடராசன் திருவுருவச் சிலைகளையும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்துள்ளார்.

மேலும் இந்தி எதிர்ப்புக்காக தமிழகமே திரண்டு ஒன்றிய ஆட்சியாளர்களை உற்றுபார்க்க வைத்த ஜனவரி 25ம் தேதியை ‘தமிழ் மொழி தியாகிகள் நினைவு நாள்’ என அரசு அறிவித்துள்ளதோடு, இவ்வாண்டு முதல் தியாகிகளுக்கு வீரவணக்கம் உள்ளிட்ட நிகழ்வுகளும் அரங்கேறியுள்ளன. இதையொட்டி பேரணியும் நடந்துள்ளது.

தமிழ்நாட்டில் தமிழ் மொழிக்கு ஊறு விளைகிற போதெல்லாம், அதை பாதுகாக்கும் கேடயமாகவே தி.மு.க.வே திகழ்ந்து வருகிறது.

பெரியார், அண்ணா, கலைஞர் வழியில் இன்றைய முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களும் மொழியை பாதுகாக்க தொடர்ந்து போராடி வருகிறார். தமிழ்மொழி, பண்பாடு, கலாச்சாரம் ஆகியவற்றை சீர்குலைக்க ஒன்றியத்தில் இருந்து எத்தனை தாக்குதல்கள் வந்தாலும், அதை தடுத்திடும் எஃகு கோட்டையாக ‘ திராவிட மாடல்’ ஆட்சி திகழ்கிறது. மொழி காக்க பாடுபட்ட தியாகிகளை இப்போது போல் எப்போதும் நினைவு கூர்வோம்.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.



விக்கிரவாண்டி சட்டமன்ற உறுப்பினர் அன்னியூர் சிவா எம்.எல்.ஏ. பொதுமக்களின் நீண்ட நாள் கோரிக்கையான விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட விக்கிரவாண்டி ஒன்றியம் செ.குன்னத்தூர் ஊராட்சியினை கெடார் ஆரம்ப சுகாதார நிலைய பகுதியில் இருந்து எண்ணாயிரம் ஆரம்ப சுகாதார நிலையத்துடன் இணைத்தற்கு அதற்கான ஆணையினை பொதுமக்களிடம் நேரடியாகச் சென்று வழங்கினார்.

### ஆலங்காயம் மேற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில்

# கழகத்திற்காக உழைத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி - வெள்ளி நாணயம்!

## நடராஜன் – ஒன்றியச் செயலாளர் வி.எஸ்.ஞானவேலன் வழங்கினர்!

திருப்பத்தூர், ஜன. 27 –

திருப்பத்தூர் மாவட்டம், ஆலங்காயம் மேற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் பொதுப்பணி மற்றும் நெடுஞ்சாலை துறை அமைச்சர் எ.வ.வேலு, மாவட்டச் செயலாளர் க.தேவராஜி எம்.எல்.ஏ. ஆகியோர் வழிகாட்டுதலின் படி, கடந்த 10 வருடங்களுக்கு முன்பு மதனாஞ்சேரியில் தி.மு.க. பொதுச் செயலாளராக இருந்த மறைந்த பேராசிரியர் க.அன்பழகன் அவர்களால் திறந்து வைக்கப்பட்ட தளபதி அறிவாலயம் 11 ஆம் ஆண்டு விழாவை முன்னிட்டு பேராசிரியர் க.அன்பழகன் அவர்களின் 35 ஆண்டுகால நேர்முக உதவியாளராக இருந்த நடராசன் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டார். தி.மு.கழகத்திற்கு உழைத்த 18 மூத்த முன்னோடிகளுக்கு ஒன்றியச் செயலாளர் வி.எஸ்.ஞானவேலன் பொற்கிழி, ரூபாய் 5000 மற்றும் ஐந்




தாயிரம் மதிப்புள்ள வெள்ளி நாணயம், பட்டு புத்தாடை வழங்கி கௌரவித்தார். இதில் வி. எம்.பெருமாள், மு.அசோகன், ஜாப்ராபாத் கவுன்சிலர் பமிதா ஆசிப், தேவஸ்தானம் கவுன்சிலர் லட்சுமி பொன்னம்பலம், மதனாஞ்சேரி கவுன்சிலர் சாவித்திரி மகேந்திரன், வி.ஜி.அன்பு, ஒன்றிய நிர்வாகிகள் ராமநாதன், தசரதன், குமார், வெங்கடேசன், சிவகுமார் மற்றும் தொண்டர்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



கடலூர் மேற்கு மாவட்டம், நல்லூர் வடக்கு ஒன்றியம் பூலாம்பாடி அரசு மேல்நிலைப் பள்ளியில் 77 வது குடியரசு தினத்தை முன்னிட்டு தேசிய கொடி ஏற்றி இனிப்பு வழங்கப்பட்டது. துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு கடலூர் மேற்கு மாவட்டச் செயலாளர் – தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி.கணேசன் ஆலோசனைப்படி 2024–2025 ஆண்டுக்கான 12ஆம் வகுப்பு, 11 ஆம் வகுப்பு, 10 ஆம் வகுப்பு ஆகிய வகுப்புகளுக்கான பொதுத் தேர்வில் முதலிடம், இரண்டாமிடம், மூன்றாமிடம் பிடித்த மாணவ மாணவியர்களுக்கு பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவர், பூலாம்பாடி முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர், நல்லூர் வடக்கு ஒன்றியக் கழக துணைச் செயலாளர் டி.அண்ணாதுரை மாணவ மாணவியர்களை கௌரவித்து, பணமுடிப்பு வழங்கி வாழ்த்தினார்.